**சுருக்கம்**

சிலை – முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் சிலையினை புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் அமைத்தல் – சிலையினை அன்பளிப்பாக வழங்குதல் – ஆணையிடப்படுகிறது.

---

**செய்தி (ம) சுற்றுலா (நினைவகம்)த் துறை**

அரசு ஆணை (நிலை) எண். 115
நாள்:16.6.2003

கூடுதல் செயலாளர், பொது, மக்களவைச் செயலகம், புதுடெல்லி நேர்முகக் கடித எண்.10/1/02-WA -1, நாள்: 28.8.2002

-------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தின்படி, முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் முழு உருவச்சிலையினை, புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் அமைத்திடலாம் என நாடாளுமன்ற கூட்டுக் குழு முடிவு செய்துள்ளதாக, கூடுதல் செயலாளர், மக்களவைச் செயலகம், புதுடெல்லி அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் 9 அடி உயர முழு உருவச் சிலையினை, புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் அமைத்திடும் வகையில், அன்பளிப்பாக வழங்குமாறு தமிழ்நாடு அரசை கோரியுள்ளார்.

அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களது 9 அடி உயர முழு உருவ வெண்கலச் சிலையினை புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் அமைத்திடும் வகையில், சிலையினை செய்து, தமிழ்நாடு அரசின் சார்பாக மைய அரசின் மக்களவைச் செயலகத்திற்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ.ராமதாஸ்
அரசு செயலாளர்

பெறுநர்

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை — 9
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை — 9
மாண்புமிகு செய்தி (ம) விளம்பத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை — 9

நகல்

தலைமைச் செயலாளர், சென்னை -9.
கூடுதல் செயலாளர், மக்களவைச் செயலகம், புதுடெல்லி 110 001
செய்தி (ம) சுற்றுலா (வரவு — செலவு)த் துறை, சென்னை — 9.
செய்தி (ம) சற்றுலா (கணக்கு)த் துறை, சென்னை — 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்பு செலயாளர் / பிரிவு அலுவலர்